பி. நடராஜன்

# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மூன்றாவது மாநாட்டுச் சிறப்பு மலர்

59

1979 ஒக்டோபர் 21

சாதி அமைப்புத் தகரட்டும்! சமத்துவ நீதி ஓங்கட்டும்!

பொதுமக்களுக்கு

# ஓர் நற்செய்தி

எமது முதல் தயாரிப்பான

'சில்வர் ஸ்ரார்'

# எவர்சில்வர் பாத்திரங்கள்

மொத்த வியாபாரிகட்கு விசேஷ கழிவுண்டு

**நேசீ லிமிடெட்,**
252, 2ம் குறுக்குத் தெரு
கொழும்பு

தொலைபேசி: 26108

**எலெக்ட்றிக் ஹவுஸ்**
120, கே. கே. எஸ், வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி; 7376

தயாரிப்பாளர்கள்;

# சில்வர்ஸ்ரார் இன்டஸ்றீஸ்

103, பிறவுண் வீதி,
கொக்குவில்

பி. நடராசன்.


சாதி அமைப்புத் தகரட்டும்!

சமத்துவ நீதி ஓங்கட்டும்

# எஸ். ரீ. நாகலிங்கம் அன் கோ.,

சுன்னாகம்

மாநாடு வெற்றிபெற

எமது நல் வாழ்த்துக்கள்!

# லாலா சோப் தொழிற்சாலை

அச்சுவேலி

*With the Best Compliments of*

DIRECTOR

**EXTERNAL STUDIES ORGANASATION**

P. O. BOX 83, JAFFNA

TELE: 7715

# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மூன்றாவது மாநாட்டுச் சிறப்பு மலர்

★

1979 ஒக்டோபர் 21

★

101, கந்தரோடை வீதி
சுன்னாகம்

## நன்றி!

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் மூன்றாவது மாநாட்டையொட்டி வெளி வரும் மலர் இது! மாவிட்டபுரத்தில் ஒரு 'தர்மயுத்தம்' நடந்த கையோடு, அந்தப் பரபரப்பான சூழ்நிலையில் 1969 தை 17 ல் நடைபெற்ற வெகுஜன இயக்கத்தின் சரித்திரப்பிரசித்தி பெற்ற முதலாவது மாநாட்டையொட்டியும் ஒரு மலரினை வெளியிட்டிருந்தோம். மாவிட்டபுரக் களத்தில் மட்டுமல்ல, வட இலங்கையின் சகலபகுதிகளிலும், ஒடுக்கப்பட்ட மக்கள், சாதி அரக்கனுடன் புரிந்த சமர் அனுபவங்களுடன் வெளிவந்திருந்தது அம்மலர். பத்தாண்டுக் காலத்துக்குப் பின், மூன்றாவது மாநாட்டையொட்டி வெளிவரும் இம்மலர், கைதடி. மிருசுவில், சண்டிலிப்பாய், கன்பொல்லை முதலிய இடங்களிலெல்லாம் புதிய உருவத்தில் தோன்றிய சாதி அரக்கனுடன் புரிந்த போர் அனுபவங்களைத் தாங்கி வெளி வருகின்றது.

உள்ளத்தில் வெடித்துக் கிளம்பும் உணர்ச்சிகளை —அதுவும் வீர உணர்ச்சியை—வெளிப்படுத்த மிகச் சிறந்த இலக்கிய வடிவம் கவிதையே! இதோ, இந்த மலரில், சாதி அரக்கனைச் சாடி அழித்திட ஒரு கவிஞர் கூட்டமே படை திரண்டு வந்துள்ளதைப் பாருங்கள்!

கடந்த காலங்களில் வெகுஜன இயக்கத்தைப் பொறுப்புடனும், நிதானத்துடனும், நிலைதளம்பாது வழி நடத்தி, ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பல வெற்றிகளை ஈட்டித்தந்த தலைவர்களின் செயற்றிறனை வெளிப் படுத்துவதாகவும் மலர் அமைந்துள்ளது.

இம்மலரில் தங்கள் பயனுள்ள கருத்துக்களை வெளியிட்டுள்ள எல்லா நண்பர்களுக்கும், விளம்பரங்கள் தந்து உதவிய வணிகப் பெருமக்களுக்கும், இதனை வெகு விரைவில் அழகாக அச்சிட்டு உதவிய நாவலன் பதிப்பகத்தாருக்கும் எங்கள் நன்றி!

சாதி அமைப்புத் தகரட்டும்!
சமத்துவ நீதி ஓங்கட்டும்!!

— ஆசிரியர் குழு

அமர கவிகள்

# மூடி மறைக்காதீர் !

சாதிப் பிரச்சினையைச் சாகடித்த பாம்பென்று
ஓதி முடிக்கும் ஒரு கூட்டம் வாழுகின்ற
சேதி தனைக் கேட்டுச் சிரிக்கின்றேன்; அழவில்லை!
'பாதி துகிலுரிந்த பாவை தனைப் பார்த்து,
போதும் உனக்கிந்தப் போர்வை நிலை' என்று
நீதி தனை ஓதும் நீசர்இவர் ......வாழுகின்றார்!

சேரிதனில் தீயிட்டு தீப்பிழம்புக்காடாக்கி,
ஏரிதனில் நஞ்சிட்டு, எஞ்சும் கிணறுகளில்
கொட்டி மலமள்ளிக் கொண்டு தணியாமல்,
திட்டி வசைமாரி தீராது ,உடல் தன்னை
தட்டிப் பதம் பார்த்து, தலைகால் தெரியாமல்
விட்டெறியும் திட்டூரம் விரவி இருப்பதனை
மூடி மறைக்காதீர்! ........

நீர் தமிழை விட்டு நிலை பிரிந்த காலத்தும்
சீர் உடை தானணிந்து சீமை மொழி பேசி
ஆரோகணித்து நீர் ஆங்கிலேயராய் இருந்து
பேரான வாழ்க்கை பெரிது உவந்த காலத்தும்
நாம் பேசி வாழ்ந்திருந்தோம் நம் தமிழ்த் தாய் மொழியை!
ஆம், இதனை அட்டியின்றி ஏற்பீரோ இந்நாளில்?
தீந்தமிழைப் பேசி உம் தேவை வரை காத்திருந்த
இந்தத் தமிழருக்கா இத்தொல்லை செய்கின்றீர்?

—கவிஞர் பசுபதி

# சாதிமுறை தீரவேண்டும்!

சாதிமுறை இந்நாட்டில் தீர வேண்டும்!
சமத்துவத்தின் நீதிஎங்கும் ஓங்க வேண்டும்!
மேதினிவாழ் ஒடுக்கப்பட்ட மக்களோடு
மேலும் எங்கள் ஐக்கியமே வளரவேண்டும்!
ஆதலினால் தோழர்களே ஆர்த்தெழுங்கள்!
அடிமைமுறை குடிமைமுறை போக்கவேண்டும்!
ஏதுஇங்கு இழப்பதற்கு எமக்கு உண்டு?
எழுந்துவிட்டால் பெறுவதற்கிவ் வுலகேயுண்டு!

— கவிஞர் முருகு கந்தராசா

# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின்

# 3-வது மாநாட்டு நகல் அறிக்கை

## 21-10-79

ஒரு குறிப்பிட்ட கால இடைவேளைக்குப் பின் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் 3-ஆவது மாநாடு இன்று கூட்டப்படுகின்றது. இவ்வியக்கத்தின் தோற்றத்திலிருந்து இன்றுவரை எம்மால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், அதனூற் கிடைக்கப்பெற்ற பலாபலன்களையும் கணக்கிலெடுத்துப் பார்க்குமிடத்து சாதிமுறைக்கும் சமூக அடக்குமுறைக்கும் எதிராக ஏனைய இயக்கங்கள் ஆரம்பித்த காலத்தோடு ஒப்பிடுகையில் — வெகுஜன இயக்கத்தின் பன்னிரண்டு ஆண்டு காலம் மிகக் குறுகியதாயினும், இக்குறுகிய கால எல்லைக்குள் எம்மால் வென்றெடுக்கப்பட்ட உரிமைகள் மிகக் கணிசமானவை என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

1966 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதி சமூகக் குறைபாடுகள் நீக்கச் சட்டத்தை அமுல் நடத்தக் கோரி,

"சாதியமைப்புத் தகரட்டும்"

"சமத்துவ நீதி ஓங்கட்டும்"

என்ற சுலோகத்துடன் சுன்னுகம் சந்தை மைதானத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட எழுச்சி ஊர்வலத்திலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இவ் வெகுஜன இயக்கம், நாடு பரவிய குரலாக மாறி,

(அ) தாழ்த்தப்பட்ட மக்களை மட்டும் கொண்ட 'தாழ்த்தப்பட்டோர் இயக்கங்கள்' என்ற வழி வழி வந்த மரபை மீறி, பல சமூகத்தினரையும் உள்ளடக்கிக் கொண்டமையும்,

(ஆ) பற்பல வகையிலான புதிய நடைமுறைகளைக் கையாண்டு தன்னை நன்கு நெறிப்படுத்திக் கொண்டமையும் நாம் அடைந்த வெற்றிகளுக்கு முக்கிய காரணங்களாகும்.

இந்த நடைமுறைகளில் நாம் பல இழப்புகளையும், அர்ப்பணிப்புகளையும் எதிர் கொண்ட போதிலும், ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகத்தினர் சகலருக்கும் என நாம் பெற்றுக்கொண்ட வெற்றிகள் மேலோங்கியே நிற்கின்றன. இவ்வெற்றிகளுக்காக தியாகங்களுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்ட சகலரும் இம்மாநாட்டின் அஞ்சலிக்குரியவர்களாவர்.

பிரசித்த மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில், வல்லிபுரம் கிருஷ்ண ஆழ்வார் கோவில், தொண்டைமானாறு செல்

வச்சந்நிதி கோவில் உட்பட பலகோவில்கள் சகல மக்களினதும் வழிபாட்டிற்கெனத் திறக்கப்பட்டமையும், சங்கானை, சாவகச்சேரி. கொடிகாமம், பருத்தித்துறை, நெல்லியடி, அச்சுவேலி, சுன்னாகம், உரும்பராய்; மானிப்பாய், காங்கேசன்துறை, தெல்லிப்பளை, பளை போன்ற சிறு நகர்ப்புற உணவுச்சாலைகளும், சிகை அலங்கரிப்பு நிலையங்கள், சலவைத் தொழிற்சாலைகள், பொதுக்கிணறுகள் சிலவும் உபயோகிக்க உரிமைகள் கிடைக்கப்பெற்றதும் வெகுஜன இயக்கத்தின் இக்கால கட்டத்திலாகும், ஆயினும் இவற்றினால் மட்டும் உரிமைகள் முழுமையாகப் பெறக் கிடைக்கவில்லையென்பதனை நாம் உணரவேண்டும். குறிப்பிடத்தக்க சிறு நகர்ப்புறங்களை அடுத்துள்ள கிராமங்களிலும், குக்கிராமங்களிலும் இத்தகைய உரிமைகள் சகல மக்களுக்கும் இன்னும் கிடைக்கவில்லை.

மிகச் சமீப காலம் வரை ஆங்காங்கே கோவில் தடுப்புக்கள், குடியெழுப்புதல், காணித்தடைகள், பாளை வெட்டுதல், போன்ற வன்முறைச் செயல்கள் நடந்துகொண்டே இருக்கின்றன, இவை யாவற்றுக்கும் மேலாக முன்பே திறந்து விடப்பட்ட கோவில்களில் அடையாளச் சின்னங்கள் வழங்கி "வேண்டாதாரை" வெளியே வைத்தல், சாதி முறையைப் பத்தடி நகர்த்தி கிறுதி போட்டு நிற்கச் செய்தல் போன்றவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன. "அத்துடன் வன்முறைக்கு எதிராக" என்ற போர்வையில் பகிரங்கமாகச் சாதிமுறையைப் பேணும் ஸ்தாபனங்களைக் கட்டி வளர்ப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

"வன்முறைக்கு எதிராக" என்ற இக்குரலின் தார்ப்பாரியத்தை உன்னிப்பாக நாம் கவனிக்க வேண்டும். இந்த நாட்டின் சட்ட வரம்புக்குட்பட்ட நடவடிக்கைகளைக் கூட தடுத்து நிறுத்துவதற்காகச் சட்டங்களுக்கு அப்பால் வன்முறைகளை உபயோகிப்பவர்களே "வன்முறைக்கு எதிராக" என்ற குரலை எழுப்பி, அதன்மூலம் சாதாரண மனித உரிமைகளைப் பெற முயலும் மக்களை வன்முறைக்காரர்கள் என்று பழிசுமத்தி, இதுவரை விட்டுக்கொடுக்காத தொடர்ச்சியான இயக்க வேலைகளினால் சரிவு கண்ட சாதிச் சுவரைத் தூக்கி நிமிர்த்தவும், அந்தச் சுவரில் மேலும் சரிவுகள் வராமல் தடுத்து நிறுத்தவும் முற்படுகின்றனர். இவர்கள் வைத்த "வன்முறைக்கு எதிராக" என்ற குரலுக்குப் பின்னால் நவீன சாதிமுறைச் சித்தாந்தவாதிகள் பலர் அணிவகுத்து நிற்பதனைக் காண முடிகின்றது. இவர்களின் இந்த நவீன சாதிமுறை மாயைக்கு - ஒடுக்கப்பட்டோருக்காகக் குரல் எழுப்புவோரெனக் கூறிக்கொள்ளும் சிலரும் இன்று சுவரப்பட்டு நிற்பது மிகவும் பேரபாயமானதாகும். இதுகாலவரை எம்முடன் கைகோர்த்து நின்ற சிலர் இந்தச் சந்தர்ப்பத்தில் "வன்முறைக்கு எதிரான அறவழிப் போராட்டக் குழுவுடன் ஒத்துப்போதல்" என்ற விதத்தில் நமக்கு எதிரான அணிக்கு ஆள் சேர்க்க முற்பட்டிருப்பது நமது கவனத்திற்குரியதாகும். வெளித்தோற்றத்தில் இவர்கள் "சாதி அமைப்பை எதிர்க்கிறோம், நாட்டுப் பிரிவினையையும் எதிர்க்கிறோம்." என்று குரல் வைத்த போதிலும், செயற்பாட்டில் இவர்கள் பின்தங்கிய மக்களை ஊடுருவி, அப்பால் தள்ளப்பட்ட மக்களால் பொதுவாக நிராகரிக்கப்பட்டுள்ள சாதியமைப்புக்கும், நாட்டுப்பிரிவினைக் கோரிக்கைக்கும் சேவை செய்பவர்களாகவே உள்ளனர்.

இன்று நாட்டின் பொருளாதார நிலையும், மக்களின் வாழ்க்கைத்தரமும் படுபாதாளம் வரை சரிந்து வருகின்றது. இதனால் பாதிக்கப்படும் மக்களின் கவனத்தை

வேறு திசைக்குத் திருப்பும் முயற்சிகளுக்கு இனவாதப் பிரச்சாரங்கள், நடவடிக்கைகள் மூலம் தூபமிடப்படுகின்றது. ஏற்பட்டுவரும் இந்த வாழ்க்கைச் சரிவை இனக்கூக்குரல் செயற்பாடுகளினாலோ அன்றி வேறெந்த அடக்குமுறை நடவடிக்கைகளினாலோ சீர் செய்ய முடியாதென்பதனை இந்த நாட்டின் சகல மக்களுக்கும் சுட்டிக்காட்டுகின்றோம். மறுபுறத்தில் இந்த நிலைமைகள் இந்த நாட்டின் பெரும் செல்வந்தர்களுக்கு நல்ல வாய்ப்பாவதுடன், அவர்கள் தமக்குள் எதுவித வேறுபாடுகளுமின்றி ஒருவருக்கொருவர் கைகோத்துக் கொண்டு, இரு இனங்களையும் சேர்ந்த சாதாரண பொதுமக்களைச் சூறையாடும் வசதியை நீடிக்கச் செய்யுமே அன்றி வேறெந்தப் பலாபலன்களையும் தரப்போவதில்லை.

மொழிக்கான உரிமைகள், பாரம்பரிய பிரதேசத்துக்கான பாதுகாப்பு, பொருளாதாரம் - கலை கலாச்சார வளர்ச்சி முதலியவற்றுக்கான தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகள் கோரப்படுவதும், அவை மறுக்கப்படுவதும் இன்று நேருக்கு நேராக நாம் காணும் நிகழ்ச்சிகளாகும்,

''தாழ்த்தப்பட்ட மக்கள் மொழிபோன்ற இந்த விடயங்களில் துளியும் அக்கறையற்றவர்கள், மொழியுரிமை இயக்கங்களுக்கு எதிரானவர்கள்''. என்ற ஒரு குற்றச்சாட்டும் எம்மீது சிலவேளைகளில் சுமத்தப்படுகின்றது,

''தமிழ்ப் பெரும் பிரிவினர்''களில்கூட மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்நிய ஆதிக்க காலங்களிலிருந்து இன்றுவரை அந்நிய மொழிக்கும் கலாச்சாரத்துக்கும் தம்மை வெறும் சுயநலத்துக்காக விற்றதும், இன்று வெறுமனே அரசியல் வயிற்றுப் பிழைப்புக்காக தமிழை உபயோகித்துக்கொண்டு. தமிழ் உரிமைக்கான சுலோக அட்டைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பதுமான நிலைமையும் அதே வேளை தாழ்த்தப்பட்ட மக்களென்று தள்ளிவைக்கப்பட்டவர்களில் மிகமிகப் பெரும்பான்மையினர் அன்றுதொட்டு இன்றுவரை தமிழ்மொழியைப் போற்றிப் பாதுகாத்து வந்ததும், அதன் காப்பாளர்கள் என்ற உரிமையோடு இன்றும் விளங்குவதுமான நிலைமையும் கண்கூடு என்பதை மட்டும் அக்குற்றச்சாட்டுக்குப் பதிலாக முன்வைக்க விரும்புகின்றோம்.

வதங்கிப்போகாமல் தலைநிமிர்ந்து நிற்கக்கூடியவர்கள் நமது மக்கள் கூட்டத்தினரும், நமது நியாயமான எழுச்சிகளை தொடர்ந்து உறுதியாக ஆதரித்து வந்தவர்களுமேயாவர். இந்த மக்களின் தேசிய உணர்வை இந்த நாட்டின் தேசப் பற்றுடைய எவருமே குறைத்து மதிப்பிட முடியாது.

தமிழ் பேசும் மக்களின் மொழி, பாரம்பரிய பிரதேசம், பொருளாதாரம், கலை கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாப்பதும் அவற்றின் அந்தஸ்தை வென்றெடுப்பதும், நிலை நிறுத்துவதுமான எமது கொள்கையைச் செயற்படுத்துவதென நாம் பகிரங்கப்படுத்துகிறோம்.

அதேவேளை நாட்டைப் பிரிக்கும் சகல செயற்பாடுகளையும் நாம் எதிர்க்கின்றோம். எமது இயக்கத்தின் உறுப்பினர்கள் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்குக்கு மேற்பட்ட எண்ணிக்கையினரான ஒடுக்கப்பட்ட மக்கள் பொதுவாகப் பிரிவினைக்கு எதிரானவர்கள் என்பதை நாம்

உணர்கின்றோம், சாதாரண தமிழ் மக்களும், சாதாரண சிங்கள மக்களும் ஒருங்கிணையாத, உள்ளடங்காத எந்த அரசு முறையும் இந் நாட்டு மக்களுக்கு நிரந்தரமான நவ்வாழ்வை தர முடியாதென்பதனைத் தென்னிலங்கையின் சாதாரண சிங்களப் பொதுமக்களில் ஒரு பகுதியினர் உணர்ந்துள்ளமைபோன்று பல்வேறு அனுபவங்களைக் கொண்டு பின் தங்கிய தமிழ் பேசும் மக்களிற் பெரும்பான்மையினரும் உணர்ந்துள்ளனர். எனவே இந்தத் தேசத்தின் நிரந்தரச் சமாதானத்துக்கு இடைஞ்சலாகவுள்ள நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை நாம் ஓங்கி நிராகரிக்கிறோம்.

இன அடிப்படையில் எடுக்கப்படும் எந்த நடவடிக்கைகளும், அது எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும் முடிவில் முழுநாட்டையுமே நாசமாக்கிவிடும் என்பதால், சகல வித இனவாத, வகுப்புவாத நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டித்து நிராகரிக்கின்றோம்.

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் பாதையில் ஏனைய சமூகங்களைச் சேர்ந்த பலர் எம்முடன் வழிநடந்து வந்துள்ளனர்.

வில்லூன்றி மயானத்தில், முதலி சின்னத்தம்பி உயிர்த்தியாகம் செய்த காலத்தில் இருந்து மனிதாபிமான உணர்வோடு தனி மனிதர்களாகத் துணிவுடன் 1966ம் ஆண்டு ஒக்டோபர் வரை பலர் பலவித ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் நல்கியுள்ளனர்.

குறிப்பிட்ட அக்டோபர் காலகட்டத்தில் ''தியாகங்களுக்கு அஞ்சாத தொடர்ச்சியான இயக்கமே ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை வென்றெடுக்கும்'' என்ற சுலோகத்தை எமக்களித்து, குறிப்பிடக்கூடிய பல வெற்றிகளுக்கும் கால்கோள் அமைத்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி எமது மேலான நன்மதிப்புக்கும், நன்றிக்கும் உரியதாகின்றது.

இதுகாலவரை வெகுஜன இயக்கம் நடாத்திய பொதுப் போராட்டங்களில் தனித்தனியாகவும், கூட்டாகவும் கலந்துகொண்டு ஆதரவு தந்த சகலருக்கும் இம்மாநாடு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

அந்நாட்களில் தமிழ்ப்பிரதேசத்தின் ஏனைய சகல அரசியல் கட்சிகளும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் நடவடிக்கைகளை எதிர்த்தன. நாடாளுமன்றம் வரை எதிர்க்குரல் எழுப்பினர். 'இலங்கையில் வியட்நாம் மாவிட்டபுரத்தில் மாஓசேதுங், கொரில்லாப்பயிற்சி' என்றெல்லாம் எள்ளிநகையாடினர் பலர் சாதிவெறியர்களுக்கு நேரடியாக உற்சாகம் கொடுத்தனர்.

இந்த வேளைகளில் சம்பவங்கள் நிகழ்ந்த ஸ்தலங்களுக்கு துணிச்சலுடன் சென்று கொடுமைகளுக்கு இலக்காகிய மக்களுக்கு தேறுதல்கூறி உற்சாகப்படுத்தி மேலும் எழுந்து நிற்கும் வல்லமையை ஏற்படுத்தியவர்கள் யாவரும் ஒடுக்கப்பட்ட மக்களால் மறக்கக்கூடியவர்கள் அல்லர்.

ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினையை பரவலாக முழு நாடும் அறிய வைத்து தென்னிலங்கைப்பகுதிகளில் சித்திரக் கண்காட்சிகள், கூட்டங்கள் விவாதங்கள், நாடகங்கள் நடாத்தி சிங்கள மக்களினது கவனத்தை எம்பால் திருப்பி வைத்ததும் சர்வதேசரீதியில்கூட எமது பிரச்சினையை உலகுக்கு அறிமுகப்படுத்திய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் தான் என்பதை நாம்என்றும் நினைவுகூர்வோம்.

தமிழர்களிடையே தமிழர்களாக ஒடுக்கப்பட்ட மக்களை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக ''பஞ்சமர்'' என்று அடைமொழியிட்டு இழிவுபடுத்திச் சொல்லொணாக் கொடுமைகள் செய்தபோதும் எம்மை நாமே பிரித்துக்கொண்டு எமக்கான தனித்த போராட்டங்களைச் செய்ய இன்றும் நாம் விரும்பவில்லை. பல்லாயிரக் கணக்கான அனுபவங்களுக்குப் பின்னால் நாம் எடுத்துக்கொண்ட கொள்கையை ஏற்று யார் ஒத்தாசை தரினும் அவற்றை ஏற்றுக்கொள்ள என்றும் தயாராக இருக்கின்றோம். மன உறுதிப்பாட்டுடனும். நல்லெண்ணத்துடனும் ஒத்தாசை தருவதற்குப் பதிலாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாலும், சாதி வெறியர்களுக்குத் தலையும் காட்டும் விலாங்கு மீன் செயல்கொண்ட எந்த அரசியல் இயக்கக்காரர்களையோ. தனி மனிதர்களையோ நாம் அங்கீகரிக்கமாட்டோம்; இனங்கண்டு எதிர்த்தே தீருவோம்.

சாதி அமைப்பின் அடிப்படையே நிலம்தான்! இந்த நிலங்களின் சொந்தக்காரர்கள் அதை வைத்தே தங்களின் சாதி அடக்குமுறைகளைத் தொடர்ந்து செய்கின்றனர். அது மட்டும் போதாதென்று சகல பகுதிகளிலும் பரந்து கிடக்கும் தரிசு நிலங்களையும் முடிக்குரிய காணிகளையும் நிலமில்லாத மக்கள் பெற முடியாத அளவுக்குத் தங்கள் அதிகார உரிமைகளை உபயோகித்தும், சாணக்கியங்களைக் கையாண்டும் தடுத்து வருகின்றனர். இந்த மக்களுக்கு ஒத்தாசை புரிய எவர் வரினும் — எந்த இயக்கங்கள் வரினும், அவரோ அன்றி அந்த இயக்கமோ நிலவுடமைக்கு எதிராகச் செயற்பட வேண்டும். இதை மறக்கும் எவரையும் எமது மக்கள் நம்பப்போவதில்லை, எங்கிருந்து ஒரு கெடுதி தோற்றுவிக்கப்படுகிறதோ அங்கிருந்துதான் அதன் அழிவு தொடங்கவேண்டும்.

○ சாதி முறை புதிய உருவில் நவீனப்படுத்தப்படுகின்றது.

○ வென்றெடுக்கப்பட்ட உரிமைகளைப் பறிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன,

○ பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை பாமர மக்களின் புலன்களுக்கு எட்டாத விதத்தில் மிகவும் நுணுக்கமான முறையில் சாதிமுறை அமுல் நடத்தப்படுகின்றது,

○ விளை நிலங்கள் பறிக்கப்படுகின்றன, குடியிருப்பு நிலங்கள் எடுக்கப்படுகின்றன. தவறினால் வீடுகள் எரிக்கப்படுகின்றன.

○

○ நாட்டுப் பிரிவினையை நோக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக, 'தனிராச்சியம் வந்தால் சாதிநோய் வேரோடு சாய்ந்துவிடும்'' என்ற போதனை மேற்கொள்ளப்படுகின்றது,

இத்தனை துயரங்களுக்கும் எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் சகல உரிமைகளையும் வென்றெடுப்பதற்காக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தனது நடவடிக்கைப் பாரம்பரியத்தைத் தொடர்ந்தும் பேணி முன்னின்று செயற்படும். எமது இயக்கம் கடந்த காலத்தில் சலுகைகளை நிராகரித்து உரிமைகளுக்காக உறுதியுடன்

செயற்பட்ட இயக்கமென்பதை எவரும் மறக்கவோ, மறுக்கவோ மாட்டார்கள். அப்பணியைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக எமது இயக்கம் பரந்துபட்ட சகல ஒடுக்கப்பட்ட மக்களேயும், ஏனைய முற்போக்காளர்களேயும் அறை கூவி அழைக்கின்றது.

உரிமைகளுக்காக எமது இயக்கம் நடாத்திய நடவடிக்கைக் காலகட்டங்களில் அந்த நியாயமான நடவடிக்கைகளுக்கு ஒடுக்கப்பட்ட மக்களின் பல்வேறு பிரிவினர்களும் — சிற்சில சந்தர்ப்பங்களில் வெவ்வேறு ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தும்கூட — மானசீகமாகவும் ஒருசிலதடவைகளில் நேரடியாகவும்கூட உதவியும் ஒத்துழைப்பும் நல்கி ஆதரவு அளித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது இவற்றினூடாகவும் சரியானதொரு கொள்கையின் காரணமாக நாம் பெற்றுக்கொண்ட வெற்றிக் கனிகளின் நம்பிக்கையினுலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஸ்தாபனங்கள் பல இன்று ஒரே அணியாக ஐக்கியப்படுமளவுக்கு முன்வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

பொதுவில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கென முன்னின்றவையும், பல்வேறு உபாய தந்திரங்களைக்கொண்டு செயற்பட்டவையுமான பல்வேறு ஸ்தாபனங்கள் இன்று இவ்வாறு ஒரு சரியான பொதுக் கொள்கையை ஏற்று "விட்டுக்கொடுக்காது தொடர்ச்சியான இயக்கத்துக்காகச் செயற்பட முன்வந்தமை எல்லோரினதும் பாராட்டுக்குரியதாகும்.

இந்த ஐக்கியம் சமூகரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தள்ளப்பட்டுள்ள சகல மக்களினதும் தன்னம்பிக்கையை வளர்க்கவும் உற்சாகத்துடன் மென்மேலும் முன்னேறிச்செல்லவும் உதவும் என்றவகையில் இந்த ஐக்கியம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றெனை இந்த மாநாடு நம்புகிறது.

இவ் ஐக்கியத்தின் அவசியத்தையும் தேவையையும் நாம் சகலரும் உணர்ந்துகொண்டதன் காரணமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பல்வேறு ஸ்தாபனங்களின் சகோதரப்பிரதிநிதிகள் இன்று இங்கு இம்மாநாட்டின் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டு தமது நல்லெண்ணத்தை எமக்குத் தெரிவிக்க வந்துள்ளனர். அவர்கள் சகலரையும் இம்மாநாடு முழுமனதுடன் வரவேற்கின்றது. மற்றும், நம்மை சமூகப்பணிகளில் ஈடுபடுத்திச் செயற்படுத்தியவர்களும் இம்மாநாட்டின் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டுள்ள ஏனைய சகலரையும் இம்மாநாடு முழுமனதுடன் வரவேற்கின்றது.

வெகுஜன இயக்கத்தின் பொதுப்போராட்டங்களில் அவ்வப்போது மக்கள் உற்சாகமும் உணர்வுபூர்வமான ஆதரவையும் நல்கியபோது, நிலவுடமையுடன் பின்னப்பட்டிருக்கும் இந்த சாதி அமைப்பை முற்றாகத் தகர்ப்பதற்கான பொதுப் போராட்டத்தை ஒரு சரியான பொதுக்கொள்கையின் கீழ் என்றோ ஒருநாள் இந்த மக்கள் யாவரும் ஓரணிக்கு வருவார்கள்'' என்ற எமது நம்பிக்கை வீண்போகவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான விட்டுக்கொடுக்காத தொடர்ச்சியான இயக்கத்தைக் தொடர்ந்தும் முன்கொண்டு செல்ல சபதமேற்போமாக!

# சாதியமைப்பும் பெண்ணடக்கு முறையும்

சித்திரா

எமது சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களிலும் பெண்ணானவள் வெவ்வேறு வகையான அதிகாரங்களால் கட்டுப்படுத்தப்படுகிருள், பெண் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும்பற்றி எவ்வளவுதான் பேசியபோதிலும் அரச ஆதிக்கம், மத ஆதிக்கம், குடும்ப ஆதிக்கம் ஆகியவற்றிலிருந்து இன்னும் எமது பெண்கள் மீண்டுவிடவில்லை, வர்க்கப்பிரிவினையுள்ள சமுதாயத்தில் பெண்கள் தமது பூரண சுதந்திரத்தைப் பெற்றுவிட முடியாதென்பதையே இது காட்டுகிறது.

சாதியமைப்பு நிலவுகின்ற நிலப்பிரபுத்துவ சமூகத்தில் பெண்ணின் நிலைமை மிக மோசமானதாகவேயுள்ளது. சாதியினுல் தாழ்த்தப்பட்ட பிரிவைச்சேர்ந்த பெண்கள் தமது எசமானர்களின் மேலதிக துன்புறுத்தல்களுக்கும் அடக்குமுறைக்கும் ஆளாகிருர்கள். தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் யாவரும் ஆண் பெண் என்ற பேதமின்றி சாதியடக்குமுறைக்கு உட்பட்டபோதிலும் பெண்களே மிகவும் இழிவுக்கு உட்படுத்தப்படுகின்றனர்,

ஒரு சமூகத்தின் கலாசார அடையாளங்கள் பெண்களைச் சார்ந்து அமைவது வழக்கம். தாழ்த்தப்பட்டோர் உயர்சாதியினரிலிருந்து வேறுபட்டவர்கள். கீழ்ப்பட்டவர்கள் என்பதைக் குறிப்பதற்கு இக்கலாசாரச் சின்னங்களிலும் வேறுபாடுகள் அமைந்தன. தாழ்த்தப்பட்ட பெண்களின் ஆடை அலங்காரங்களில் மிக மோசமான கட்டுப்பாடுகள் சமீபகாலம்வரை நிலவி வந்துள்ளன. ரவிக்கை அணியவும் பின்னி விடவும் தாலியைத் தங்கக் கொடியில் சேர்த்து அணியவும் தடை விதிக்கப்பட்டது. மீறி நடந்தோரின் ரவிக்கைகள் கிழிக்கப்பட்டதும் தாலிகள் பறிக்கப்பட்டதும் சமீப காலம் வரை நடந்த சம்பவங்களே.

இவற்றைவிட தாழ்த்தப்பட்ட சமூகப்பெண்கள் பலவிதமாகவும் இழிவுபடுத்தப்படுவதுண்டு. அவர்களது உணர்ச்சிகளுக்கு எவ்விதத்திலும் மதிப்பளிக்கப்படுவதில்லை. மாருக மிகவும் இழிவான நிபந்தனைகளுக்கு ஆளாகின்றனர். பாலியல் ரீதியான சுரண்டலுக்கும் உள்ளாவதுண்டு. பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் உயர் சமூகத்தினரின் அதிகாரவட்டத்துள் வாழும் பெண்கள், அவ்வுயர் சமூகத்தவரின் சொத்துக்களாகவே கணிக்கப்படுகின்றனர், அவர்கள் தனி நபர்களாகவோ தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் கொண்டவர்களாகவோ மதிக்கப்படுவதில்லை.

தாழ்த்தப்பட்ட பெண்களில் பெரும்பாலோர் நிலவுடைமையாளர்களின் தோட்டங்களிலும் வீடுகளிலும் கூலிகளாக வேலைசெய்கின்றனர். தினக்கூலிகளான இவர்களுக்கு ஆண்களிலும் குறைந்த வேதனமே கிடைக்கிறது. இவ்வகையில் அவர்களது

உழைப்புச் சுரண்டப்படுகின்றது. வறுமையினால் கடின உடலுழைப்புத் தவிர்க்கப்பட வேண்டிய கர்ப்பகாலத்திலும் பிரசவத்தின் பின்னும் தமது உடல் நிலையைக் கவனிக்காமல் வேலைக்குச் செல்கின்றனர். தாய், சேய் இருவருமே இதனால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

தமது துன்ப நிலையினையும், அதன் காரணங்களையும் இன்று பெண்கள் உணர்ந்து வருகின்றனர். வர்க்க சமுதாயத்தில் பெண் ஆணிலும் அந்தஸ்தில் குறைந்தவளாகக் கருதப்படுவதும் ஆணின் சொத்தாக அமைவதுமே அவளது துன்பங்களுக்கு அடிப்படையாகும். எனினும் தாழ்த்தப்பட்ட சமூகப் பெண்களின் மேலதிக கஷ்டங்களுக்குச் சாதியமைப்பும் ஒரு காரணம். சாதியமைப்புக்கு எதிரான போராட்டம் பெண்ணடக்குமுறையின் ஒரு அம்சத்திற்கு எதிரான போராட்டமுமாகும்.

குட்டிக் கதை

## கந்தனும் கந்தசாமிப்பிள்ளையும் கடவுளும்

கந்தசாமிப் பிள்ளையின் நிலத்தில் கந்தன் வேலை செய்து வந்தான்; கடுமையாக வேலை செய்தான். கூலியோ கஞ்சிக்கும் போதவில்லை.

கந்தன் தினந்தோறும் படுக்கைக்குப் போகுமுன் கடவுளிடம் வேண்டிக் கொண்டான்: ''கடவுளே! நான் வியர்வை சிந்த உழைக்கிறேன். கண் திறந்து பார்,,

கந்தசாமிப் பிள்ளை கந்தனை தனது வீட்டுக்குள் நுழைய விடவில்லை; தனது கிணற்றில் நீர் அள்ள விடவில்லை; அவரைக் கண்டால் தோள் துண்டை எடுத்து கக்கத்தில் வைத்துக் கொண்டு ஒதுங்க வேண்டியிருந்தது.

கந்தன் கடவுளிடம் முறையிட்டான்; ''கடவுளே! நான் ஒரு தீங்கும் செய்யவில்லை! ஏன் என்னை இப்படி அவமானப்படுத்துகிறாய்?''

கந்தசாமிப் பிள்ளை சுமத்தில் நிறையலாபம் பெற்றார்; ஒரு படமாளிகை கட்டினார்; பல வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டார்; பல வாடகைக் கார்கள் வாங்கினார்.

கந்தனின் நிலைமை மோசமாகிக் கொண்டே போயிற்று கிடைத்த கூலியில் உயிர் வாழ்வதே கஷ்டமாய் இருந்தது.

கந்தன் கடவுளை வேண்டினான்: 'ஆண்டவனே! நீதான் கந்தசாமிப் பிள்ளையைப் படைத்தாய்; அவன் சொகுசாக வாழ்கிறான்; நான் நாளுக்கு நாள் தேய்கிறேன் கருணை காட்டப்பா;''

ஒரு நாள் கந்தனின் கடவுள் கனவில் தோன்றினார்.

கந்தன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். ''படைத்தல், காத்தல், அழித்தல், ஆகிய முக்கருமங்களையும் ஒருங்கே செய்யும் பரம் பொருளே! என் கஷ்டங்களுக்கும், அவலங்களுக்கும் ஒரு முடிவு கூறப்பா!"

கடவுள் கூறினார்: "கந்தசாமிப் பிள்ளையைப் படைத்தவனும் காத்தவனும் நான் அல்ல; கந்தசாமிப் பிள்ளையும் அவனைப் போன்றோருமே என்னைப் படைத்தார்கள். என்னைக் காப்பவர்களும் அவர்கள் தான். அவனை அழிக்க என்னால் முடியாது ......... உன்னாலும் உன்னைப் போன்றோராலுமே முடியும்''

— 'தம்பி'

# நவீன உருவில் சாதிமுறை

ஆர். இந்திரஜித்

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் உருவாக்கப்பட்ட சாதி அமைப்பினுல் ஏற்பட்ட அடக்கு முறைகள், அதன் கோரத்தனமான கொடுமைகளையெல்லாம் செய்து முடித்து, இன்றைய முதலாளித்துவ சமுதாயத்தில் நவீன உருவம் பெற்று புதிய உத்திகளைக் கொண்டுளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஓர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு. சாதியடக்கு முறைகள், ஒடுக்கப்பட்டவர்களின் உள்வாழ்க்கை முறையிலிருந்து அவர்களின் வெளியான நடவடிக்கைகள் வரை பகிரங்கமாகவே அடிமைத்தனத்தை அவர்களின் மீது செலுத்தி வந்தது.

ஒரு தாழ்த்தப்பட்ட மகன், ஒரு பொதுவான பாதையில் தான் நடந்து வந்த தன் அடிச்சுவடுகளையே அழித்து மறைக்க வேண்டுமென்பதற்காக காவோலையொன்றை இழுத்துக் கொண்டு செல்ல வேண்டிய நிலை இருந்தது. ஒரு பெண், இரவிக்கை அணிந்தமைக்காக, கொக்கைச் சத்தகத்தால், அந்த ரவிக்கை கொழுவி இழுத்துக் கிழிக்கப்பட்டது; கவிஞர் பசுபதி குறிப்பிட்டது போல, 'சேரிதனில் தீயிட்டுத் தீப்பிழம்புக் காடாக்கி, ஏரிதனில் நஞ்சிட்டு, எஞ்சும் கிணறுகளில் கொட்டி மலமள்ளிக் கொண்டு தணியாமல், திட்டி வஞ்சமாரி தீராது, உடல் தன்னைத் தட்டிப் பதம் பார்த்துத் தலைகால் தெரியாமல் வீட்டேறியும் நிட்டூரங்கள்' அன்றிலிருந்து இன்றுவரை நடைபெற்று வருகின்ற நாகரீகங்களே !

அண்மையில் நடைபெற்ற தென்னைமரத் தறிப்புச் சம்பவமும், நிர்வாண ஊர்வலச் சம்பவமும் கூட இதே பழையபாணி நாகரீகத்தின் மற்றொரு உச்சக்கட்டச் சம்பவங்கள்தான்! ஆனுல் இன்று, இந்த அடக்குமுறை நாகரீகம் நவீன உருவத்தில் நடைமுறைப்படுத்துவது. பரிணும வளர்ச்சி, புரட்சிகரப் பாரம்பரியம் எல்லாவற்றையும் தகர்த்தெறிந்த மூளை வளர்ச்சியினுலேற்பட்ட அடக்கு முறைச் சிந்தனைகளினுல் ஆகும்.

களவு எடுக்கக் கூடாது என்று சொல்பவன் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுவது போலவும், ஏழை எளியவர்களிடம் லஞ்சம் வாங்குவது போலவும் இது நடை முறைப்படுத்தப் படுகின்றது.

சாதிமுறை இருக்க வேண்டுமென்று இன்று பகிரங்கவாகச் சொல்பவன் யாருமில்லை. அந்தரங்கத்தில், ஒதுக்கப்பட்ட மக்களைப் பாவித்து, தமது நலன்களை பெருக்கிக் கொள்ளவும் அந்த நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் இந்த உத்தி முறை பயன் படுத்தப்படுகின்றது: இந்தப் பாவித்தலை ஒடுக்கப்பட்ட மக்கள் உணரத் தலைப்படும் போதும், அதை நிராகரிக்க முற்படும் போதும் இந்த நவீன அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்படுகின்றது.

ஓர் ஒடுக்கப்பட்டவனுடைய வீட்டில், அவனுடைய ஓர் உறவினன் போலவே, பழகவும், தின்னவும், குடிக்கவும், நன்மை தீமைகளில் பங்கு கொள்ளவும் ஓர் உயர்த்தப்பட்டவனுக்கு, அவனுடைய சமூகம், நாகரீகத்தின் பேராலும், இன ஐக்கியத்தின்(?) பேராலும் அனுமதி வழங்கியுள்ளது. அதே போல், ஒதுக்கப்பட்டவனும், உயர்த்தப்பட்டவனுடைய வீட்டிலும், சமூகத்திலும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதை உயர்த்தப்பட்ட சமூகம் சகித்துக் கொண்டுள்ளது. ஆனுல் தனது நலன்களுக்கு பங்கம் ஏற்படும் பட்சத்தில் ஒடுக்கப்பட்டவன் மூர்க்கத்தனமாக அடப்படுவது நிதர்சனமாகும் !

ஒடுக்கப்பட்ட மக்களும் இன்று வளர்ச்சியடைந்துள்ளார்கள். பெருவாரியாக என்று சொல்ல முடியாவிட்டாலும் கணிசமான அளக்வுகு அவர்கள் கல்வி கற்று

அரசாங்கத்திலும் தனியார் நிறுவனங்களிலும் சிற்றூழியரிலிருந்து பெரிய உத்தியோகங்கள் வரை பல மட்டங்களிலும் பதவி வகிக்கிறார்கள். ஆசிரியர் தொழில் புரிகின்றார்கள், சிறு தொழில்களை நடத்தி வருகின்றார்கள் சாதியடக்கு முறையின் கொடிய அழுத்தத்துக் கூடாகவே அவர்கள் இவற்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இங்கெல்லாம் சகபாடிகளாகவுள்ள உயர்த்தப்பட்ட சமூகத்தினர், சுரண்டல், லஞ்சம், குறைபாடல் போன்ற இழிந்த செயல்களுக்கு இவர்களை பாவிக்க முற்படுகின்றனர். உடந்தையாயிருக்கும் வரை 'சமத்துவம்' காட்டப்படுகின்றது. மறுக்கும் பட்சத்தில் அல்லது, விமர்சிக்கப்படும்' பட்சத்தில் மறை முகமாகச் சாதி அடக்கு முறை நடைமுறைப் படுத்தப்படுகின்றது. மேலே கூறப்பட்ட நிறுவனங்களிலெல்லாம் பெரும்பான்மையாகவும், மேலதிகாரிகளாகவும் உள்ள உயர்த்தப்பட்டவர்களால் அவனுடைய முன்னேற்றம் தடுக்கப்படுகின்றது அவன் பின் தள்ளப்பட்டுப் பழிவாங்கப் படுகின்றான்.

கந்தோர்களிலும், பாடசாலைகளிலும், மற்றும் நிறுவனங்களிலும் நடைபெறும் இச் செயல் முறையை ஓர் உதாரணமாகக் கொண்டு, அரசியல் கட்சிகளிலும் இந்த நவீன சாதி முறை கையாளப்படுவதைச் சுட்டிக்காட்டுவது அவசியமாகின்றது.

விழிப்படைந்து வரும் ஒடுக்கப் பட்ட மக்கள் உழைப்பினால் உரம் பெற்ற தமிழ் மறவர்கள்! அடி, தடி, சண்டைக்காரர் என்று, நாகரிகமடைந்ததாகக் கருதிக் கொள்ளும் உயர்சாதி மக்களால் அழைக்கப்படுபவர்கள். முதலாளித்துவ அமைப்பு அரசியல் கட்சிகளிலும் சண்டித்தனங்களுக்காக இவர்கள் பாவிக்கப்படுவது சர்வ சாதாரணம். முதலாளித்துவ இனவாத அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எனப்படும் பெரும்புள்ளிகளிலிருந்து ஊர்மட்டத்திலுள்ள இளந் தலைவர்கள்வரை தமது பாதுகாப்பாளர்களாக வைத்துக்கொள்வதற்கு ஒடுக்கப்பட்டவர்களே பயன்படுத்தப்படுகின்றனர். அரசியலைக்கட்டிக்காக்கவும் விரோதிகளைத் தாக்கவும் பயமுறுத்தவும் அவர்கள் பாவிக்கப்படுகின்றனர், சிறு சிறு சலுகைகளை அள்ளித்தெளிப்பதோடு இவர்களுக்குரிய 'கடன்' தீர்க்கப்படுகின்றது. கட்சிகளிலே இவர்கள் ஒரு போதும் மேற்படிகளுக்குப் போக முடிவதில்லை.

துரதிஷ்டவசமாக, சில இடது(சாரி) அரசியல் கட்சிகளினுலும் இந்த நவீன உத்திகள் கையாளப்படுவதையும் நாம் கவனத்தித் கொள்ளத்தான் வேண்டும். சாதிப் பிரிவினை என்பது வர்க்கப் பிரிவினையின் ஒரு கிளைத் தோற்றமே என்பது மார்க்ஸீய சித்தாந்தம்? இதன் காரணமாக மார்க்ஸீய தத்துவங்களை அடிப்படையாகக்கொண்ட இடதுசாரிக் கட்சிகளில் ஒடுக்கப்பட்ட மக்கள் அணிதிரளுவது நியாயமானதே! ஆனால் இங்கும் இவர்கர் படைவரிசையில் நிறுத்தப்படுவது சிந்திக்க வேண்டிய விஷயம்! அரசியல் கட்சிகளில் முதலாளித்துவ—இன வாதக்கட்சிகளாயினும் இடதுசாரிக்கட்சிகளாயினும் 'படைவரிசை'களில் நிற்பவர்கள், ஒடுக்கப்பட்ட தமிழ் மறவர்களே யாதலால், கட்சிகளுக்கிடையில் மோதல் ஏற்படும் போதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போதும் 'ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிராக ஒடுக்கப்பட்ட மக்களே' போரிட்டு இழப்புகளை ஏற்கின்றனர். 'தியாகத்திற்கும் இழப்புகளுக்கும் அஞ்சாத சேவைக்காக'த் தம்மை அர்ப்பணிக்கின்றனர். படைவரிசையினர் விழிப்படைந்து விமர்சிக்கத் தலைப்படும் பட்சத்தில் நவீன அடக்கு முறை நடைமுறைப்படுத்தப் படுகின்றது, கட்சியிலிருந்து வெளியேற்றம் சலுகைகளுக்கு ஆட்பட்டதாகப் பழிப்புரை. சற்றே வசதி படைத்த ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர்கள் சிலரிடம் கைநீட்டிச் சலுகைகளும் கோட்டாக்களும் பெற்றுத் தமது வாழ்க்கையைச் செழுமைப்படுத்திக் கொண்ட சுயநலத் தலைவர்கள், தமது பிழைப்புக்கு இடைஞ்சல் ஏற்பட்டதும், அந்த ஒடுக்கப்பட்ட தலைவாகள் சலுகைகளுக்கும் கோட்டாக்களுக்கும் ஓடிப்போனதாகக் குற்றச்சாட்டு! இதுவும் ஒருவித அடக்கு முறையே! மிகவும் உன்னிப்பாக கவனத்தித் கொள்ளப்பட வேண்டிய விடயம்!

இந்த நாட்டில் மட்டுமல்ல, எந்த நாட்டிலுமுள்ள சிறுபான்மையினராயினும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களாயினும் தனித்து நின்று போராடித் தமது விடுதலையைப் பெற முடியாது: அதுவும் மார்க்ஸிய தத்துவத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. பெரும்பான்மை இன மக்களிலுள்ள தொழிலாளர், விவசாயிகள், புத்திஜீவிகள், முற்போக்காளரின் நல்லெண்ணத்தைப் பெற்று அவர்களுடன் இணைந்து போராடுவதன் மூலமே— வர்க்க ரீதியாகப் போராடுவதன் மூலமே— தமது பிரச்சினைகளைத் தீர்க்கவும் தமது விடுதலையைப் பெறவும் முடியும். இதனைச் சகல ஒடுக்கப்பட்ட மக்களும் தமது கருத்திற் கொள்ளவேண்டிய அதேவேளையில், தாம் பாவிக்கப்படும் சூழ்ச்சிக்குப் பலியாகாத நிதானத்தையும் கைக் கொள்ள வேண்டும்! ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர்களும் இதனை உணரக் கடமைப்பட்டவர்கள்!

வர்க்க நலன்களையும் சாதி அமைப்பையும் பாதுகாப்பதை இலட்சியமாகக் கொண்ட முதலாளித்துவக் கட்சிகளைப் பற்றி இங்கு அக்கறை காட்டப் படாத போதும் இத் தலைவர்களையிட்டு ஒடுக்கப்பட்ட மக்கள் நம்மை மறுபரிசீலனை செய்தல் அவசியம்? ஆனால், இடதுசாரி அரசியல் கட்சிகள் சம்பந்தமாக இங்கேகூறப்பட்ட கருத்துக்கள், எதிர்ப்புரட்சிகரச் சிந்தனையின் பாற்பட்டதாக வியாக்கியானம் செய்யப்படக்கூடும் ஆனால், போராட்டசக்தியான ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரை நடைமுறை உண்மை இதுதான்! இந்த இடது அரசியல்வாதிகள் மிக ஆழமானதும், மிகப் பழமையானதும், மிகப் பிற்போக்கானதுமான சாதியடக்கு முறையின் வலிமை மிக்க கறைபடியவிடாது தம்மைக் காப்பாற்றிக் கொள்ளாமல், பாவிப்பு அரசியல் நடத்த முற்பட்டால் இந்தத் தேசத்தின் விடுதலை மேலும் பின் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகும்! அத்துடன் இத் தலைவர்கள், 'பிழைப்பு' நடத்துவதான அபவாத த்திற்குள்ளாவதும் தவிர்க்கமுடியாததே!


எமது நல்வாழ்த்துக்கள்!

டவர் கோப்பி அன் கூல் பார்

324, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7891.

1968 ஒக்ரோபர் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தின் தோல்வியின் பட்டியல்.

# சாதி வெறியின் புதிய தோற்றங்கள்

வெற்றியா? தோல்வியா?

கே. தங்கவடிவேல்

நிலப்பிரபுத்துவத்தின் தத்துக் குழந்தையான சாதி அமைப்பு ஆயிரக்கணக்கான வயதுடையது. வர்ணாச்சிரம தர்ம அணிகலன்களின் பகட்டுக்குள் தன்னை வெகு சாமர்த்தியமாகப் பேணி வளர்த்துக் கொள்ளும் தந்திரம் அதன் கை வந்த கலையாகும்.

தமிழ்ச் சமூகத்தின் மாண்புமிகு வரலாற்றுப் பெருமைகள் பலவற்றையும் பாதுகாக்கும் பணி சாதி அமைப்பிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இதுவரை உடைத்து நொறுக்கப்படாது கிடக்கும் நிலபிரத்துவத்தின் சூழ்ச்சிநிறைந்த பாசறையே இதற்கான புகலிடமாயுள்ளது. இந்தப் பாசறையிலிருந்துகொண்டு இதுவரை செய்து வந்த காரியங்கள் குரூத்தனமும் கொலையும், மிலேச்சத்தனமும், அநாகரிகமுமன்றி வேறல்ல.

தமிழ்ச் சமூகத்தின் சாபக்கேடான சாதி அமைப்பைப் பாதுகாப்பதில் பல நவீன முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இந்த நிலைமையைக் கட்டிக் காப்பதில் சில சாதிமான்கள் தமது கல்வி அறிவையும், செல்வத்தையும், பதவிகளையும், செல்வாக்குகளையும் காலநேரமதிந்து அவதானவாக நல்கிவருகின்றனர்.

இந்த வகையில் இவர்கள் நவீனவடிவில் செய்து வரும் செயல்கள் பற்றி சிறு குறிப்புகள் சில இங்கு தரப்படுகின்றன:

(1) கோவில் விழாக்களின்பேர்தும், கிரியைகளின்போதும் தேவையான பணிவிடைகளையும், தொண்டுகளையும் செய்வோர்க்கு அடையாள — அனுமதி தொண்டர் — சீட்டுகள் வழங்கும் முறை.

(2) கர்ப்பக்கிருகம்— மகா மண்டபம் என்பனவற்றிற்கு வெளியே சில அடிதூரத்தில் இரும்புக் கிராதிகளை அமைத்து தேவையற்றவர்களை அப்புறப்படுத்துதல்.

(3) வன்முறைகளுக்கு எதிரான சாத்வீக–அறவழிப் போராட்ட முறை. கறுப்புப்பட்டியணிந்து, உண்ணாவிரதமணிந்து அகிம்சாமுறையில் எதிர் நடவடிக்கையில் ஈடுபடல்.

(4) மயிர் வெட்டல், சவரஞ் செய்தல் மலசல கூடம் சுத்திகரிதல்.

(5) பாடசாலையில் நடைபெறும் சரஸ்வதி பூசைகளில் வழக்கமாக கமாக வழங்கும் பிரவாதத்திற்குப்பதிலாக பிஸ்கட்டும், சோடாவும் வழங்குதல்;

(6) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கிணறுகளை அமைத்து குறைந்த செலவில் அமைக்கக்கூடிய துலாவைப் போடாமல், கூடிய செலவிலாயினும் நீரிறைப்பு எந்திரத்தையும், குழாய்களையும் அமைத்தல்

(7) ப. நோ. கூ. சங்கத்தின் ஊழியர்களின் இடமாற்றத்தின் போது, ஊழியர்களின் சாதிப் பிரிவுக்கேற்ற விதத்தில் மாற்றத்தைச் செய்தல்

(8) மேற்கூறியவை போன்ற பொது ஸ்தாபனங்களில் சரஸ்வதி பூசை முதலிய வைபவங்களை நடாத்தாமல் விடுவது:

(9) கிராமப் புறப் பாடசாலைகளில் உணவு, நீர், விநியோகங்களைக்குறிப்பிட்டசில மாணவற்களைக் கொண்டு செய்விப்பது.

(10) கிராமப் புறக் கோவில்களுக்கு மாணவர்களால் பணிவிடைகள் மேற்கொள்ளப்படும் போது ஒடுக்கப்பட்டபிள்ளைகளை கோவில்வெளிப்புறப் பணிகளிலும் ஏனைய மாணவர்களை கோவில் உட்புறப்பணிகளிலும் ஈடுபட வைத்தல்;

குறிப்பிட்ட இவைகள் கண்களுக்கு முன்னால் தெரியவைகளே;

# போராடச் செல்லுகின்றோம்!

தீண்டாமையே உன்னை எம் தீச்சுவாலைகள் விரைவில்
தீண்டியேதீரும்! தீய்ப்பதற்குள் ஓடு உன் சவக்குழிக்கு...

ஒக்டோபர் 21ல் தெறித்த சிறு தீப்பொறி இன்று-நாட்டின்
பக்கமெல்லாம் சுடர்விட்டு எரிவதை நீபார்த்திலையோ!
செங்கதிர்கள் உன்னை வீழ்த்தவென்று வந்த போதும், நீ
வெண்கதிராய் ஒளி இழந்து சிரிப்பதுதான் புதுமையாகும்!

வரப்புயர நீருயரும்; வாழ்வுயர, சாதிமுறை அழியாதோ!
வாழ்வுயர வழியொன்று வருவதற்கே நாம் இங்கு
நீண்ட படைநடப்பாய் நிமிர்ந்து நின்று போரிட்டு
இழப்பதற்கு ஏதுமில்லா ஏழைமக்களானாலும்
இறப்பதற்கே முந்திவந்து இருளகற்ற முந்துகின்றோம்!

அண்டவெளியில் நம்ஐயாமார் சென்றிடலாம்
ஆகாயவீதியிலே ஆலயங்கள் அமைத்திடலாம்
ஆலயக்கதவுகளை அடித்து இழுத்துப் பூட்டிடலாம்
ஆனாலும் ஓர்நாளில்–
அகிலம் அதிரும்! அதில்தான் சரித்திரமே மாறும்
மட்டுவில், கைதடி, மாவிட்டபுரமெல்லாம்
கட்டோடு உன்னில் கலந்ததனால் அன்றோ
பலவாண்டின் பின்னும்.
எத்தனையோ! சமத்துவங்கள் எத்தர்கள் தந்த பின்னும் (?)
எம் அடிமை மாளாமல், எள்ளளவும் மீளாமல்
போராடச் செல்லுகின்றோம் புதுமலர்ச்சி காண்பதற்கே...

தீண்டாமையே உன்னை எம் தீச்சுவாலைகள் விரைவில்
தீண்டியேதீரும்! தீய்ப்பதற்குள் ஓடு உன் சவக்குழிக்கு

— நல்லை அமிழ்தன்

# போலி வேஷம்

பாராளுமன்ற உறுப்பினர்கள் 'சலூன்' வேலை
பார்க்கவந்து பணி புரிந்தார் சொற்வேளை
ஊராளுமன்ற உறுப்புரிமை பெறுதற்காய்
ஊத்தைவேலை செய்வதற்கும், பந்தி தன்னில்
ஊரார்மெச்ச தீண்டத்த காரோ டுண்ணும்
ஓர்உலக சாதனையை நாட்டு தற்கும்
சேராதாரோடு சேர்ந்துநடிப் பதெல்லாம்
சேரிவாழும் பஞ்சமர்கள் 'வோட்டு'க் காமே!

கவிஞர்ந்த காட்சிப்படத் துண்டுக் காக
கந்தலாடை அலம்புவதும், கள்ளி றக்க
அவர்தாம் மரமேறுவதும் சாதி தன்னை
அவனியிங்கு வாழச்செய்யும் அபாயமாகும்!
புவியிலிவர் புரட்சியொன்று செய்வ தாகில்
புத்திரர்கள் தம்மைப் பஞ்சமர் கள் தம்
புவித்தொழிலில் ஈடுபடுத்தி நீடு நீடே
பரம்பரையாய் இங்குவாழச் செய்த லாதோ?

கறுப்புப்பட்டி இயக்கங்களும் கந்து டைப்பு
கனத்தசாதி மனிதரொருவர் 'கக்கூ'செடுத்து
நிறுவியதால் சாதியிங்கு ஒழிந்த தென்று
நினைப்பதுதான் சாதியின்னும் வாழு கின்ற
உறுத்துதலைக் கூடுதலாய் நிலவச் செய்யும்
உண்மைநிலை புரிந்துகொண்டு போலி வேஷம்
அறுத்தெறிய அணிசேர்வீர் அகில மெங்கும்
அடக்கப்பட் டொடுக்கப்பட்ட மக்கள் தாமே!

— நவாலியூர்க் கவிராயர்

# பயணத்தை
# நிறுத்த மாட்டோம்!

பரம்பரையாக வந்த பழக்கத்திற்கு அடிமைப்பட்ட
தரங்கெட்ட தமிழச் சாதித் தலைமுறை! அரசர் கூட
முரண்பட்டுச் சேரர், சோழர், பாண்டியர் என முக்கூறாய்ப்
புறம் பட்டுப் பிளவு பட்ட புத்தியிற் பித்துக் கொண்டோர்!

நரர்களில் மட்டும் தானா? நாயிலும் சாதி பார்ப்பார்!
பறையன் என்றொரு சொல் இன்று பறங்கியர் மொழியிற் சென்று
விரவுதற்களித்த மேலாம் வியன் மொழி, ஆகா! எங்கள்
தரமுயர் மதுரக் கன்னித் தமிழன்றோ? பெருமை என்னே!

வடக்கத்துச் சொல், திசைச்சொல், வரத்துச்சொல், அயற்சொல்
துடக்குகள்-- பேசுகின்ற சொல்லிலே கூடப் பார்க்கும்
முடக்குவாதம் பிடித்த மூடரை ஒழிப்பதற்குத்
திடத்துடன் அடிமுன்னேறித் துலைவந்திடலன்றோ மார்க்கம்?

ஆயிரம் ஆண்டுக் காலமாக வேர் விட்டு வந்து
போய் உரம் பெற்ற சாதிப் புன்மையை, சிரித்துப் பேசி,
வாயினால் நியாயம் கூறி, வட்ட மாநாடு கூட்டி
நேயமாய்த் தீர்ப்போம் என்று நினைத்தவர் எமக்குள் உண்டு!

இரத்தத்தில் ஊறிப் போன இராட்சச மூர்க்கச் சாதிப்
பித்தத்தைச் சமாதானங்கள் பேசப் போய்த் தீர்க்கலாமோ?
இரத்தச் சாட்சிகளாய் மாறி இயக்கமே யானோர் தம்மைச்
சித்தத்தில் வைத்தே இந்தச் செருக்கடன் இறுத்தல் வேண்டும்!

முன்னர் வில்லூன்றிக் காட்டில் முதலி பேர்ச்சின்னத்தம்பி,
அன்ன நிச்சாமப் போரில் குமரேசு, கார்த்திகேசு
பொன்னுயிர் போத, வைத்தி பொன்றச் சண்டிலிப்பாய் ஊரில்,
மன்னு மந்துவில் ரத்னம் மாள— நாம் வேள்வி இட்டோம்!

குருதியால் தமிழ்ச் சமூகக் குற்றங்கள், குறைகள் எல்லாம்
பொருதி நாம் அடித்து, நாளை புதியதாய்ச் சரித்திரத்தைச்
சரி பெற எங்கள் தர்ம சாசனமாக மாற்றி
எழுதுவோம் என்ற உண்மைக்கு இவர்களின் உயிர்கள் சாட்சி!

ஆலயத்தோடும் வேலை ஆலைகளோடும் கல்விச்
சாலைகளோடும் சந்தி சபைகளினோடும் ஓயோம்!
பாளைய உலகை மாற்றி நாதியற்றோரின் வெற்றிப்
நாளையமாக்கும் மட்டும் பயணத்தை நிறுத்த மாட்டோம்!

—தான்தோன்றிக்கவிராயர்

# அக்டோபர்

அக்டோபர் இருபத்தொன்றதுவே — சாதி
அசுகையின் விச்சைவென்றதுவே — வட
திக்கினில் மூண்ட தியதுவே — தேச
வெகுஜன ஒளியின் தியதுவே!

கொடுமையின் கோரத்தாண்டவங்கள் — சாதிக்
கிறுக்கரின் திமிர் ஆட்சியதில் — தினம்
கடுமை கொண்டெழுந் தழுத்தியதால் — மக்கள்
கிளர்ந்தெழுந்த முதல் அக்டோபர்.

தாழ்ந்தவர் இணைந்த அக்டோபர் — புரட்சித்
தீரர் இணைந்த அக்டோபர் — சமத்துவ
வாழ்வு ஜனித்தொளிர்ந்திடவே — புதிய
பாதை காட்டிய அக்டோபர்.

மட்டுவில் மாவட்டபுரமதிலே — எங்கும்
மாவொளி பரப்பியே இருள்சாய — இயக்க
திட்டங்கள் பற்பல வென்றே — சாதனை
தோற்றியெழும் நல் அக்டோபர்.

சாதியில் நாமோர் இனமென்றவர் — சதவு
சாத்திரிய பாதையை மறித்தார் — தேரை
வீதியில் வைத்தே இனங்கண்டார் — கைதடி
விழித்தெழ வைத்தது அக்டோபர்!

மரமதைத் தறித்துயிர் அழித்தவர் வல்லமை
— குடிமை
மக்கள் குடிசைகள் எரித்தவர் கொடுமைகளா
— தமிழர்
மரபினில் வழிவரும் சாதியின் மிடிமைகள் — சமரதில்
மண்ணிட வீரியம் தரும் அக்டோபர்.

— பொன் பொன்ராசா

சிங்களத்தில் சாதியம்

படித்த இலங்கையர் சார்பில் சேர் பொன். இராமநாதன் தெரிவு செய்யப்பட்ட சிலகட்டத்தில் சாதி என்ற காரணி செல்வாக்குச் செலுத்தியிருக்கிறது என்று அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அதாவது இவருக்கு எதிராகப் போட்டியிட்ட கோரக்கா பெர்னாண்டோ கரவா இனத்தைச் சேர்ந்து இருந்தமையால் கொவிகம என்ற சிங்கள பிரிவினர் தம் பிரிவினர்களாக தமது வேளாளர் பிரிவைச் சேர்ந்த சேர். பொன். இராமநாதன் அவர்களை ஆதரித்தார்கள் என்று கருதுகின்றார்கள். — தமிழ்நேசன். 1986.

தமிழ்மன்றம், யாழ். ப. க., ப. 76.

# காலத்தின் நீதி

பாரின் வடத்தினைத் தொட்டிழுத்துப் பெரும்
பாரம் சுமப்பவர்கள் - பசிக்
கோரம் தவிர்ப்பவர்கள் - சிறு
தேரின் வடத்தினைத் தொட்டிழுத்தால் தெய்வம்
கூசி நடுங்கிடுமோ? - உயிர்
மூசி ஒடுங்கிடுமோ? - அட,
ஊரின் வடத்தினைத் தொட்டிழுக்கக் குரல்
கூவி அழைப்பதுமேன்? - சமன்
பேசி இழுப்பதுமேன்? - ஒரு
தாரின் வடத்திலும் வீசிடுமே மலர்
மேவிய செம்மை மணம்! - உனக்(கு)
ஏனிந்தக் கீழ்மைக் குணம்?

ஒப்பு: இதனும் திங்களும்

தென்னையில் ஏறிய தென்னவனின் உயிர்
என்ன கதியாச்சு? - உடல்
என்ன விலைபோச்சு? - அட,
என்ன துணிவினிலே அவன் பொன்னுடல்
ஏலத்தில் கூறு போட்டாய்? - இதற்கோ
ஈழத்தில் கூறு கேட்டாய்? - ஓர்
அன்னை வயிற்றில் உதித்தனம் என்று நீ
செப்புதல் வேஷமடா! - அதை
ஒப்புதல் நாசமடா! - இனிக்
கன்னை பெருக்கி நம் கையில் விலங் கொடித்(து)
உன்னுதல் பாதையடா! - இது
காலத்தின் நீதியடா!

சாதியும் தமிழரும்

—என். கே. ரகுநாதன்

# சமத்துவம் சமைத்திடு!

1; அடடா ! ஒடுக்கப் பட்டவனே !
அசிங்க சமூகம் மாறிடவே
எடடா ஐக்கியப் போர்க் கொடியை
எஃகாய் நெஞ்சம் உரம் பெறவே
தொடடா, பாணம் குறிபார்த்துச்
சுரண்டும் அமைப்புத் தொலைந்திடவே
நடடா, பொதுமைப் பயிரதன்னை
நன்றே வளர்த்து அறுவடைசெய் !

2; காலங்கடந்த அமைப்பிதனைக்
கல்மனம் உடைந்து கிடுகிடுக்கச்
சீலம் பொங்கச் சீர்செய்தே
சிங்கம் போலக் கர்ச்சனைசெய் !
மேலோர் எம்மை வாழ்த்திடுவார்,
மெய்ம்மை என்றுந் துதிபாடும்;
வேலோன் புரிந்த வீரத்தை
விரும்பிய வாறு கைக் கொள்ளேன் !

3; வெயில் மழை காற்று வெண்பனியும்
விண்வெளி உந்தலில் வருவனவே !
மயிலே இறகு போசடென்றால்
மனமே உவந்து போட்டதுண்டோ !
உயிரே துச்சம் என மதித்து
உலகே வியக்கப் போராடு!
கயிலை வாசன் வந்தாலும்
கயவர் திருந்தார், திருந்தாரே !

அவநம்பிக்கை

4, எடுமெடு மெடுமென எடுத்திடு
இலட்சிய சூளுரை முடித்திடு
இடுதிடு வெனவொரு தீமையாம்
தீண்டா மைதனை ஒழித்திடு
சட சட வெனவே சாய்த்திடு
சாதி அமைப்பையே சரித்திடு
பட பட வெனவே மாற்றிடு
பாரினில் சமத்துவம் சமைத்திடு !

—கழுகி

# ஒரு புறமும் மறு புறமும்

காற்றில் அவ்வொலி கலந்து வந்தது:
கூட்டம் நடந்த இடத்தினை அடைந்தேன்.
மைக்கின் முன்னால் நின்ற கனவான்,
மளமள வென்று பேசினார்; கேட்டேன்:

''ஈழத்தின் தலையாம் எங்கள் எழில்மிகு யாழ்ப்பாணத்தின்
சீரெல்லாம் உரைக்கச் சொற்கள் சிக்காது உண்மையீது.
கல்வியிற் சிறந்தோர், கற்றோர், கவிஞர்கள், எழுத்தாளர்கள்
நன்மக்கள் மரபு காத்து நயமாக வாழும் நாடு.
கற்றோர்கள் பரம்பரையைக் கணித்து அவர் மரபு தம்மைப்
புத்தகம் போட்டுக்காட்டும் புலமையர் வாழும் நாடு.
வீதிக்கோர் கோயில் கட்டி கோயிலில் விழாக்கள் வைத்து
ஆகம விதிகள் தப்பாது அழகாகப் பூசை செய்வார்.
அமெரிக்கா இங்கிலாந்து அராபியா பர்மா சம்பியா
பன்னாடும் ஓடி மீண்ட பணத்தினால் உயர்ந்த நாடு.
தமிழர்கள் திரண்டு நின்று தனித்துவம் காட்டி நிற்கும்
அமிழ்தினும் இனியதேசம் அதுதானே நம் யாழ்ப்பாணம்!'

பேச்சின் முடிவில் பேசிய மனிதர்
சோடா குடிக்கச் சற்றே குனிந்தார்
''ஒரே ஒரு கேள்வி உங்களிடம்'' என
ஒரு குரல் மேடையில் ஓங்கி ஒலித்தது
சீர் கேடுகளை ஏன் நீர் மறந்தீர்?
மாவிட்ட புரத்தில் நடந்த மறியலை
மறந்து விட்டீரா? பெரியீர்; சொல்க!
ஊரைப் புகழ்கிறீர் ஒற்றுமை சொல்கிறீர்
சீர் கேடுகளை ஏன் நீர் மறைத்தீர்?
மனிதனை மனிதன் பொசுக்கிய நாற்றம்
தமிழனைத் தமிழன் தாழ்த்திய நாற்றம்
புனித பூமியில் வீசிய நாற்றம்
இலங்கை எங்கணும் இன்று மணக்குதே
இதை நீர் உரைக்க ஏனோ மறந்தீர்?
நிதானமாய்த் தெளிவாய் உறுதியாய் அந்தக்
கேள்வி ஒலித்தது; கேள்வி ஒலித்தது.
பதில் சொலத் தெரியா நம் பேச்சாளர்;
பாவம்; தலையைக் குனிந்து கொண்டார்!
கேள்விகள் கேட்டவன் நிமிர்ந்து நின்றான்!
அவன் பின்னாலே இன்னும் பலபேர்
கேள்விகள் கேட்க எழுந்து நின்றனர்!

— குரு

தீண்டாமையா?
வர்க்க பேதமா?

# பிசகு

தினன் அவன்
ஒரு நாள் ...
சீமானின் வீடடைந்தான்.

"ஏய்! நீ கடன்காரா, என்னடா!
போ நாயே!"
என்றிரைந்தான் சீமான்.

இவனோ இரங்கினான்,
குன்றிக் குறுகிக் குனிந்து
'ஏன் இந்த இன்னல் எனக்கு?'
என்றே ஏங்கினான்.

"போன பிறப்பிலே புண்ணியங்கள்
ஆனமட்டும் செய்யவில்லை நீ.
அதனால் தீண்டாதான் ஆகினாய்.
ஐயோ, கெடுவாய், அழி!
இந்தப் பிறவியிலும்
என் கடனைத் தீர்க்காமல்,
குந்தி இருந்து குழி புகுந்தால்,
வந்து வந்து
பின்பும் பிறப்பாய்,
பிசகுகளைத் தீர்ப்பதற்காய்.
நன்மை பல பெறுவேன், நான்.
உழைக்காமற் சும்மா
நான் உட்கார்ந்தாற்கூட,
தழைக்கும் என் வாழ்வு;
தருவாய் பழைய கடன்
நோகாமற் காசெனக்கு
நூற்றைம்பது கிடைக்கும்"

Cause

Ref. மல்லிகை. 1971 July.
சு.ம.ச.
வெளியீட்டுப்
பேச்சு.

— சீமான் உரைத்தான் சினந்து.
"மெய்யாய் இருக்கும் இது.
மேலோர்கள் அப்படித்தான் சொல்லியுள்ளார்கள்.
சுகதுக்கம் — எல்லாமே
இப்பிறப்பிற் செய்யும் வினைப்பயன்கள் மட்டுமல்ல
முற்பிறப்பும் தாக்கும் எமை மொய்த்து"

இப்படியாய்த் தினன் எடுகோள்கள்
முன்வைத்தான்.
"அப்படியா?" என்றான், அவன் மைந்தன்.
எப்படியோ?
மைந்தனுக்கு மைந்தன்
வழிவழியாய்ப் போதிக்க,
வந்திருக்கும் கொள்கை வழக்கு.

— முருகையன்

# ஒரு கிராமத்தின் கதை

மிருசுவில்கிராம வயல் வரப்புகளில்
செம்மண் தோய்ந்து மண்புழுக்களைப் போல்.
இழிசனர் சிலபேர் தரிசனம் தந்தனர்
கிழடுகள் இளசுகள் சின்னம் சிறுசுகள்
நூறு நூறு வருடத்தியல்பு போல்
களை பிடுங்குதற்காய் காலையில் நடந்தனர்.
நிலாமண்மீது மானிடன் மிதித்து
தசாப்தமொன்று கழிந்ததன் பின்னும்
பள்ளிக்கூட வாசலை மிதிக்கா
பஞ்சைக்கன்றுகள் முன்னே துள்ளும்
மாரிவெள்ளம் தேங்கியபள்ளம்
சவாலைப்போல முன்னே கிடக்க
சிறுசு ஒன்று கல்லைவிட் டெறியும்.
''சாதி வெள்ளாளர் குளிக்கும் குளமடா
இதிலே குளித்ததற்காக உன்மாமனை
தென்னைமரத்துடன் வெட்டிவிழுத்தி
சென்றவருடம் கொன்றனர் பாவிகள்...''
நீர்விளையாட அருகிருந்தவனின்
முதுகில் ஓங்கி ஓங்கி அறைந்து
கிழடு ஒன்று ஒப்பாரி பாடும்.
இளசுகள் எல்லாம் விம்மிவெடிக்கும்;
'நாங்கள் வளருவோம்
நாங்கள் வளருவோம்
அந்த மரத்தின் இலைகளைத் தொடுவோம்
நாங்கள் இந்தக் குளத்தில் குளிப்போம்...''
சிறுவன் மீண்டுமோர் கல்லைவிட்டெறிவான்.
மாரிவெள்ளத் தேக்கம் கண்டு
கிழடுகள் அஞ்சும் இளசுகள் விம்மும்
மாவட்டபுரக் கோவில் வாசல்த்
தடைகளைத் தகர்த்தவர் சந்ததிகள் நாம்
என்பது போல சிறுசுகள் மட்டும்
முன்னே விரியும் வயல் வெளியினிலே
கற்களைத்தேடிக் கண்களை எறியும்!

— வ. ஐ. ச. ஜெயபாலன்

சாதியமா?
வர்க்கபேதமா?

# தமிழ் மகனே சிந்தி நன்றாய்!

வள்ளியெனும் தாழ்ந்தகுல வனிதை தன்னை
வனப்புறத்தில் ஆறுமுகன் வாழ்க்கை கொண்டான்
பள்ளியெனும் கீழ்சாதிப் பாவை தன்னை
பத்தினியாய் உயர்மக்கள் மணமும் கொள்ளார்!
துள்ளியதாய் மேடைதனில் துண்டு எடுக்க
இட்டார்சிலர் கண்ணீரின் துளிகள் விடுவார்!
தள்ளியே விடுகின்றார்! தம்மில் சிலரை
தான்சரியா! தமிழ்மகனே! சிந்தி நன்றாய்!

தேர்க்கயிறு பிடிப்பதற்குத் தேடி வந்து
தேங்காய்கள் உடைத்தோரை தெருவில் அடித்தார்!
ஊர்நடுவில் இருந்ததோர் ஊற்றுக் கிணற்றில்
உள்ளிட்ட மாதர்களின் உயிர்கள் மாய்த்தார்!
போர்ப்பறைதான் கொட்டுதற்கு பொங்கும் என்பார்
"பொதுநாங்கள்" என்றழுது பொய்யும் சொல்வார்
ஆர்என்று இவர்திமை அறிந்து கொண்டு
அழிப்பதற்கு தமிழ்மகனே, சிந்தி நன்றாய்!

ஆலயத்தில் நுழைந்தோரை அதட்டிஞரிகள்
அணிந்திருந்த சால்வைதனை அவுழ்த்தும் விட்டார்
ஓலையால் வேய்ந்திருந்த ஓட்டைக் குடிசை
ஒன்றிற்கு நெருப்புத்தான் ஒருநாள் வைத்தார்!
காலையிலே கத்திகள்தான் கரத்தில் ஏந்தி
கண்துடைக்க சவரத்தொழில் காட்சி காட்டும்
கோலத்தை மாற்றுகின்ற கொடியோர் கொள்கை
மாய்ப்பதற்குத் தமிழ்மகனே, சிந்தி நன்றாய்!

— பாஷையூர் தேவதாசன்

# வர்க்கப் போரினைத் தொடுப்போம்!

சாதிகள் யாவும் ஒழிப்போம்! - ஆண்ட
சண்டாளர் சதியை அழிப்போம்!
நாதிகள் என்றெமை நினைப்போர் - நாதனை
துண்டாட போரினைத் தொடுப்போம்!

ஓதுவார் வேதமும் கூடியே - பின்
ஒதுக்குவார் சாதிகள் கூறியே
ஆதியில் ஏதுதான் சாதிகள்? - தாம்
ஆளவே ஆக்கினர் பாவிகள்!

பஞ்சமர் என்றெமை வதைக்கிறார் - அவர்
நெஞ்சினைப் பிளக்கத் அடித்தெழு!
நஞ்சினை ஊட்டியே வளர்க்கிறார் - நாட்டினை
வஞ்சகர் கொஞ்சமும் நினைக்கிலார்.

ஈழத்தில் இனவெறிக் கோரத்தை - சில
ஈனப் பிறவிகள் ஆக்குறார்.
ஆளத்தலைப் படும் கூட்டத்தார் - தமிழ்
ஈழப் பிரிவினை வைக்குறார்.

ஆளுதல் யாரினை யாரிங்கு - என
அறிதலும் வேண்டும் தாமுமே.
வாழ்தலின் ஏற்றத் தாழ்வுகள் - போக
வர்க்கப் போரினைத் தொடுப்பமே!

— தம்பி இல்லமுலேன்

# சாதி முறையினைச் சாடிடு....!

சாதிப் பிரச்சினையை சாகடித்துவிட்டோம்
ஓதிட ஒருவரை 'எம். பி'யாக்கி விட்டோம்;
சேதி எங்கும் செப்பிய பின்பு
பாதியில் இங்கு 'பட்டிகள்' ஏனோ?

வீராப்புப் பேசும் வீரர் இருக்கூட்டம்
சீரான வழியை செப்பாது ஒருபோதும்.
ஆன்மீகம், அறப்பயிற்சி, அன்புவழியெல்லாம்
ஆண்டோரின் அடுத்தவழி, சத்தப்போலி!

சாதிமுறையினைச் சாடிடும் ஓரியக்கம்
சோதனை பலகடந்தும் கடனிலே மயக்கம்
தீண்டாமை ஒழிக்கும் திறம் கொண்ட
திரள் இயக்கம், திரண்டே எழட்டும்!

பேதமை நூறு பேணி வளர்த்திங்கு
நாமதில் உயர்ந்தோர் என்றேறும்
வேதனை விடுத்து வேலைகள் செய்வீர்.
சாதனை செய்து சமத்துவம் காண்பீர்!

சாதி முறையினைச் சாடிட எழுவீர்!
சமத்துவம் பேண சங்கற்பம் செய்வீர்!
மனிதர் உரிமையை மனிதர் மறுக்கும்
மடமையை அழி..., மக்களே எழுவீர்!

— வி. ரி. இளங்கோவன்

வெளிநாடுகளில் வேலை பெறுவதற்கு
தொழிற் பயிற்சி

## தேசிய
## தொழிற் பயிற்சி நிறுவனம்

57, பாஷிஷால் வீதி, யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

## முருகன் மில்ஸ்

மெயின் வீதி, சாவகச்சேரி

கடைச்சல், கிறில் கேற்,
சகல இரும்பு வேலைகளுக்கும்

## தவம் எஞ்சினியேஸ்

தபாற்கந்தோர் வீதி, அச்சுவேலி

அன்பளிப்பு

## கைத்தறி மாளிகை

டச் வீதி, சாவகச்சேரி.

தொலைபேசி: 232


நாவலன் பதிப்பகம் நல்லூர்

எமது நல் வாழ்த்துக்கள்!

ஸ்ரார் எலக்றிக் வெல்டேஸ்
அண்ட்
ரேணிங் வேக்ஸ்

ஸ்ரான்லி றோட் — யாழ்ப்பாணம்

எமது மனமுவந்த நல்லாசிகள்

**ஸ்ரீசக்தி ஸ்ரோர்ஸ்**

118, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

உரிமையாளர்: திரு. க. லோகநாதன்

தொலைபேசி: 7844

எமது நல் வாழ்த்துக்கள்!

## மோகன்ஸ்

M. V, மோகன் R, & T, V, Engr (Malaysia)

மெயின் வீதி, சங்கானை

மாநாட்டின் வெற்றிக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

## கமலா கருஜ் அன் இன்டஸ்றீஸ்

53, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

லேத், சேப்பிங் மெசின் வேலைகள்

மோட்டார், உதிரிப்பாகங்கள், கேற்,

கிறில் வேலைகள் செய்பவர்கள்.

எமது நல் வாழ்த்துக்கள்!

# சீமா சில்க் இண்டஸ்றீஸ்

அலுவலகம் :
8A, சேர்சிற்றம்பலம் A கார்டினர் மாவத்தை
கொழும்பு - 2
தொலைபேசி : 35910

தொழிற்சாலை
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7170

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க

மூன்ருவது மாநாட்டை வாழ்த்துகிறேம்!

எம். எம். அப்துல்காதர் சகோதரர்கள்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 443